உ

சிவமயம்

# திருப்பொற்சுண்ண

## விளக்கம்

(மூலம் - பொழிப்புரை - அரும்பதவுரை - ஆய்வுரை அடங்கியது)



"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

ஆக்கியோன்:
க. கயிலாயநாதன் B. A. Dip. in. Ed.

1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ

ஓம் சக்தி



# திருப்பொற்சுண்ணை

## விளக்கம்

(மூலம்-பொழிப்புரை-அரும்பதவுரை - ஆய்வுரை அடங்கியது)

ஆக்கியோன்:

வட்டுக்கோட்டை / சித்தன்கேணி கலாநிலைய வெளிநிலைப் பட்டதாரிப் படிப்பு நிறுவன முதல்வர், ஆங்கிலப் போதனாசிரியர், இலங்கைக் கல்விச்சேவையில் முன்னாள் அதிபர், பலாலி ஆசிரியர் கலாசாலை முன்னாள் ஆங்கில விரிவுரையாளர், எழுத்தாளர்.

க. கயிலாயநாதன் B. A. Dip. in Ed

உரிமை ஆக்கியோனுக்கு) 1987    விலை ரூபா: 5.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு - 1987
(All Rights Reserved by the Author)



"ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி"

ஆக்கியோன் எழுதிய பிறநூல்கள்

| | | | |
|---|---|---|---|
| தமிழ் மொழி விளக்கம் | — | வெளியீடு | 1953 |
| திருப்பாவைத் திறவு | — | ,, | 1970 |
| சதியா? விதியா? (சமூக நாடகம்) | — | ,, | 1986 |
| திருவெம்பாவைத் திறவு | — | ,, | 1986 |
| அருணகிரி வருணனையில் அநுபூதி | — | ,, | 1987 |
| ஆங்கில மொழி ஆசான் | | அச்சில் | |
| English Language Self - Tuter | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

"தமிழ் மொழி விளக்கம்" என்ற நூலை, பேராசிரியர் டாக்டர் மு. வரதராசன் அவர்களின் அணிந்துரையோடு, கல்வி அமைச்சின் அங்கீகாரம் பெற்று, அகில இலங்கையிலும் பொதுத் தேர்வுகளுக்குப் பயன்படுத்த, தனிப்பட்ட முறையில் 1953ம் ஆண்டு, துணிவோடு வெளியீடு செய்து, யாரும் நினைக்க முடியாத சாதனையை நிலைநாட்டியவர், எங்கள் கல்விமான் அதிபர் திரு. க. கயிலாயநாதன் அவர்கள். இவர் கல்விக்குச் செய்த சேவை இது ஒன்றே போதும் மேலைநாட்டில் ஆங்கிலத்தை ஆங்கிலேய ஆசானிடம் முறைப்படி கற்றுத்தேறி, தாம் பெற்ற ஆங்கில அறிவை, மேலைநாட்டவருக்கும், ஆசிரியர்களுக்கும், சிறுவர் முதல் பல்கலைக்கழக மாணவர் வரையுள்ளோருக்கும், திறமையாகப் பயிற்றி வருகின்றார். மேலும், பல நூல்களை எழுதிப் பதிப்பித்து, வெளியிட்டு வருகின்றார். எமக்கு எல்லாம் இவை நலவிருந்தாம்.

எம்மில் பலர், மணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருப்பொற்சுண்ணப் பாடல்களை, ஏதோ செத்தவீட்டுப் பாடல்கள் என்று எண்ணியுள்ளோம், இப்பாடல்களின் ஆய்வை, எங்கள் அதிபர் நூல் வடிவில் வெளியிடுகிறார். இந்நூலை வாசிப்பவர்கள், தாம் எண்ணிய எண்ணம் நிச்சயமாகத் தவறு என்பதை, இதன் உட்பொருளை உணர்வதன் மூலம் அறிந்து பேரானந்தம் அடைவர்.

இவ்வறிஞர் எழுதிய சகல நூல்களையும் வாசித்து இன்புறும் பேற்றைப் பெற்றவன் யான். எம்மத்தியில் நல்ல கல்விமான்கள் வாழ்கின்றார்கள் என்ற பெருமைக்கு அதிபர் திரு க. கயிலாயநாதன் அவர்கள் ஓர் உதாரண புருடராக விளங்குகின்றார். இதனாலேயே, இவர் அண்மையில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பெற்றார். இன்று இவர், சித்தாந்த - விஞ்ஞான விளக்கங்களுடன் "திருப்பொற்சுண்ண விளக்கம்" என்ற அரியநூலை வெளியிடுவது பற்றிப் பெருமகிழ்ச்சி. எமது வாழ்த்துக்கள்

வழக்கம்பரை சனசமூக பஜனைச் சபை — க. வாமதேவன்
சுழிபுரம். 20-7-87 — கௌரவ செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி

# ஆக்கியோன் நோக்கு

"சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்து" என்று மணிவாசகர் அறுதியிட்டு உறுதியாக உரைத்ததை, நாம் மறந்துவிட முடியாது. இந் நோக்கம் கைகூடவே, மூலத்திலுள்ள சொற்றொடர்களைப் பிரித்துச் சீரையும் விளங்கவைத்து, பொழிப்புரை, அரும் பதவுரை, ஆய்வுரை ஆகியவற்றை ஆக்கியுள்ளேன். இந் நூலை, அடக்க விலையில் முடக்க வேண்டியிருப்பதால், ஆய்வுரையைச் சுருக்கவேண்டி இருக்கின்றது.

சுண்ணம் இடிப்பது பிணவீட்டில்தான் என்று கற்றோரில் சிலரும், மற்றோரில் பலரும் தவறுக எண்ணுவது விந்தையே. திருக்கோயில்களில் குடமுழுக்குக்காக (அபிஷேகம்) சுண்ணம் இடிக்கும்போது, வடமொழி மந்திரங்களுக்கு ஈடாகப் பாடுவதற்கே, சுண்ணப்பாடல்கள் இருபதையும் வண்ணப் பாடல்களாகத் திருவாய் மலர்ந்தருளினர் திருவாதவூரர். இன்றும் இவை ஆலயங்களில் ஓதப் பெறுவதை நாம் காதாரக்கேட்கின்றோம்.

அவனருளாலே அடியேன் ஆக்கி அளித்துள்ள "திருப் பொற்சுண்ண விளக்கம்" என்ற இந்நூல், சண்டிலிப்பாய் சீரணி அருள்மிகு நாகம்மாள் திருமுன் ஆடிப்பூரமாம் இன்று வெளியாவதற்கு நான் கோடி புண்ணியம் செய்தருக்கவேண்டும்.

எங்குதான், எப்போதுதான் இப்பாடல்களை ஓதினாலும், ஆன்மஈட்டேற்றத்தை எய்த இந்நூல் துணைபுரியும் என்பது துணிபு.

இந்நூலை வெளியிட உதவிய அத்தனை பேருக்கும் மொத்தத்தில் எனது உளமார்ந்த நன்றி உரியது. இவர்களுக்குத் திருவருள் பாலிப்பதாக.

நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க!

கந்தகோட்டம், க. கயிலாயநாதன்.
வட்டுக்கோட்டை. பிரபவ, ஆடிகாய புதன் 29 - 7 - 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்



இந்நூல் ஆக்கியோன் திரு. க. கயிலாயநாதன் அவர்கள் ஆற்றிய கல்வி, கலை, சமய, சமூகப் பணிகளைப் போற்றி வட்டுக்கோட்டை சங்கரத்தைப் பிட்டியம்பதி அருள்மிகு பத்திரகாளி அம்பாள் திருமுன், சிவதருமவள்ளல் மில்க்வைற் தொழிலதிபர் திரு. க. கனகராசா J. P. அவர்கள் மனமுவந்து உபசரித்த பொன்னாடையை 11 - 4 - 1987 அன்று போர்த்திக் கௌரவிக்கப் பெற்றார். இதைத் தொடர்ந்து அன்னார் "அருணகிரி வருணனையில் அநுபூதி" என்ற பொருள் பற்றி விரிவுரை ஆற்றுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி

முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்

வித்துவான் இ பாலசுப்பிரமணிய ஐயர் B A. (Hons)

அவர்கள் மனமுவந்து வழங்கிய

# அணிந்துரை

தேவார திருவாசகத் திருமுறைகள், ஏனைய இலக்கியங்கள் போலல்லாது, தனித்தன்மை வாய்ந்தன. இவை மெய்யடியார்கள் மூலம் இறைவனால் வெளிப்படுத்தப்பட்ட அருள் நூல்கள். இவ்வுண்மையை மாணிக்கவாசகப் பெருமான் "நினைவித்துத் தன்னை என் நெஞ்சத்து இருந்து அம்பலத்து நின்று புனைவித்த ஈசன்" என்று தமது திருக்கோவையாரில் நன்கு விளக்கியுள்ளார். இவ்வருள் நூல்களைப் படித்து விளங்கிக் கொள்ளும் அணுகுமுறையும், அவரவர் ஆன்ம முன்னேற்றம் ஆன்ம பக்குவம் என்பவற்றிற்கு ஏற்றவாறு வேறுபடுகிறது. இதனால்போலும், தேவாரப் பதிகங்களுக்கு உரையெழுத எவரும் முற்படவில்லை. திருவாசகத்திற்கோ, பேருரையும் சிற்றுரையுமாக பல உரைகள் எழுந்துள்ளன. காரணம், மக்கள் கவிமரபைப் பின்பற்றி, "திருவெம்பாவை", "திருப்பொற்சுண்ணம்", "திருச்சாழல்" "திருப்பொன்னூசல்" போன்ற பாடல்களைத் தன்னுள் கொண்டிருப்பதுதான்

திருப்பொற்சுண்ணம் இறைவனுடைய திருமஞ்சனத்தின்போது திருமஞ்சனப் பொடியை இடிக்கையில் பாடுவதற்காக அடிகளால் இயற்றப்பட்டது. இன்றும் கோயில்களில் திருவிழாவின் போது நடக்கும் தீர்த்தோற்சவத்தில் திருப்பொற்சுண்ணம் இடித்தலும் கிரியைகளில் ஒன்றாக நடைபெறுவதைக் காணலாம். "பூவியல் வார்சடை எம்பிராற்குப் பொற்சுண்ணம் இடிக்கவேண்டும்" என்பது இக்கருத்தைத் தெற்றென விளக்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரி அதிபர், ஆசிரியர் கலாசாலை ஆங்கில விரிவுரையாளர் ஆகிய உயர்ந்த பதவிகளை வகித்தவர்களும் நூலாசிரியரும் சிறந்த தமிழ் அறிஞராகத் திகழ்பவருமாகிய திரு. க. கயிலாயநாதன் அவர்கள், இலக்கிய சமய ஆய்வு நூல்களை வெளியிட்டு வந்துள்ளார்கள். குறிப்பாக சென்ற ஆண்டு "திருவெம்பாவைத் திறவு" என்ற நூலையும் இவ்வாண்டு "அருணகிரி வருணனையில் அநுபூதி" என்ற நூலையும் வெளியிட்டார்கள். இன்று "திருப்பொற்சுண்ண விளக்கம்" என்ற இவ்வுரை நூலையும் வழங்க முன்வந்துள்ளார்கள்.

இந்நூலுரையில், செய்யுள்களைப் படிப்பதில் வரும் இடர்ப்பாடுகள் எல்லாம் போக்கப்பட்டுள்ளன. அரும்பதங்களுக்குக் கருத்துக் கொள்ளும்போது, உரையாசிரியரவர்கள் கூடியவரையில் அவற்றின் திரிசொற் கருத்துக்களைத் தவிர்த்துள்ளது ஒரு சிறப்பம்சமாகும். ஆய்வுரையில் வேண்டிய இடங்களுக்குப் புராணக்கதை விளக்கங்களும், சித்தாந்தக் கருத்து விளக்கங்களும், மெய்ஞ்ஞான விஞ்ஞானத் தொடர்புகளும் தரப்பட்டுள்ளது போற்றுதற்குரியது.

அண்மையில் வெள்ளிவிழாக் காணும் கலாநிலையத்தை நிறுவி, அதன் இயக்குநராகவும் முதல்வராகவும் கடமையாற்றிவரும் அறிஞர் திரு. க. கயிலாயநாதன் அவர்கள், அருள்நூல்களுக்கு உரை எழுதிச் சிறு நூல்களாக அவற்றை வெளியிட்டு வருவது, ஒரு பெரிய வரப்பிரசாதமாகும்.

சைவ உலகம், இவ்வரிய "திருப்பொற்சுண்ண விளக்கம்" நூலுக்கு ஆதரவு தந்து ஊக்கமளிப்பதாக.

கோகுலம், இ. பாலசுப்பிரமணியம்.
வட்டுக்கோட்டை. 23 - 7 - 87.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசக சுவாமிகள் தில்லையில் அருளிய

# திருப்பொற் சுண்ணம்

## சுண்ணம் தரும் எண்ணம்

*சக்திகளால் தனுகரண புவன போகங்கள்தமை*
*அத்தனுக்குச் சுண்ணம்அவை யாமிடிக்கக் கூவுதலே*
*ஒத்த திருச்சுண்ணம் (திருவாசக உண்மை)*

மருவா நெறி அளிக்கும் வாதவூரர் எங்கோன் அருளியது திருவாசகம் என்னும் தேன். இது உள்ளொளி பெருக்கும் தெள்ளமுது. ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பது.

பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய மணிவாசகர், திருவாசகமாக அருளியவை ஐம்பத்தொரு செம்பொற் பகுதிகள். இவற்றுள் சிவபெருமானின் குடமுழுக்குக்கென (அபிஷேகம்) பாடப்பெற்ற பகுதியே திருப்பொற் சுண்ணம்.

எல்லை இல்லாக் கூத்தன் தில்லைநகருக்கு முன்னொருக்கால் எழுந்தருளினர். பத்திநெறி வித்தகர் வாதவூரர் அங்கே, திருமுழுக்கு விழாவில் (தீர்த்தோற்சவம்) நடராசப் பெருமானுக்குத் திருமஞ்சனம் ஆட்டப் பெண்கள் சுண்ணம் (பொடி) இடித்துக்கொண்டிருந்தனர். அவ்வயமயம், மந்திரங்கள் வடமொழியில் ஒலித்தன. இச்சூழ்நிலை அடிகளார் இதயத்தை தொட்டது. செந்தமிழ் சிந்தைக்கு வந்தது. நந்தமிழ் தெய்வீக மொழி, பூர்வீக மொழி. மந்திரமும் தந்திரமுமான மருந்து. பிரிந்த உயிரைப் பரிந்து மீட்ட விரிந்த தமிழ் மறை. எனவே, மணிவாசகரின் அணிவாக்காக, சிறந்த திருப்பொற்சுண்ணப் பாடல்கள் பிறந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமறையாக, திருமுறையாக இருபது பாசுரங்கள் சிறந்தன. திருமுறையின் அருமைதான் என்னே!

திருப்பொற்சுண்ணம் சைவசித்தாந்தக் கோட்பாடுகளைக் கொண்டது மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும் ஒன்றுபடும் இடங்களை இங்கு கண்டு இன்புறலாம். சொற்சுவை பொருட்சுவை ததும்பும் அருட்பெரும் திருப்பாட்டு.

சுண்ணம் இடிக்கும் போது உலக்கை போடும் ஓசையில் ஒத்திசைக் (Rhythm) கேட்கலாம். எடுத்துக்காட்டாக, முதல் இரண்டு வரிகளையும் முத்துநல் / தாமம் / பூமாலை / தூக்கி, முளைக்குடம் / தூபம் / நல்தீபம் / வைம்மின் என்று பிரித்து, தன்னன / தானனா / தானா, தன்னன / தன்னன தானனா / தானா என்ற மெட்டிலும், மோகன இராகத்திலும், திஸ்ர நடை ஏகதாளத்திலும் அமையப் பாடினால், இதயத்துக்கு இதமாய் இருக்கும்.

பல்சுவை நிரம்பி பொருள் விரவும் திருப்பொற்சுண்ணம் பாசுரங்களை விளக்கும் இந்நூலுள் இறங்கி, நன்னயம் பெற்று, பேரின்பப் பெருவாழ்வு பெறுவோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

தில்லையில் அருளிய

# திருப்பொற்சுண்ணம்

## ஆனந்த மனோலயம்

திருப்பொற்சுண்ணம் என்பது, தெய்வீகத்தன்மை வாய்ந்த பொன்போல் ஒளிவீடும், குடமுழுக்குக்கான (அபிஷேகம்) வாசனைப் பொடி. ஆனந்த மனோலயம் என்பது மகிழ்ச்சி மிகுதியால் உள்ளம் ஒன்றுபட்டு, இறைவனிடம் ஈடுபடுதல்.

## அறுசீரடி ஆசிரிய விருத்தம்

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடம் தூபம்நல் தீபம்வைம்மின்
சத்தியும் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டுஇசைமின்
சித்தியும் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன் ஐயா றன்அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 1

### பொழிப்புரை

திருப்பொற்சுண்ணம் இடிக்கும் இடத்தில் முத்துமாலைகளையும்பூமாலைகளையும் தொங்கவிட்டு, கோலமிட்டு, முளைக்குடம், தூபங்களையும் நல்ல தீபங்களையும் வையுங்கள். சத்தியும், திருமகளும், பார்மகளும் நாமகளோடும் கூடிப் பல்லாண்டு பாடுங்கள் சித்தியும், கௌரியும், பார்பதியும் கங்கையும் வந்து சாமரை வீசுங்கள். அத்தனும், ஐயாறனும், அம்மானுமாகிய இறைவனைப் பாடி, அப்பெருமான் குடமுழுக்காட பொன் நிறமுள்ள சுண்ணத்தை நாம் இடிப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அருஞ்பதஉரை

தாமம் - மாலை; சோமி - இலக்குமி; சித்தி - கணபதியின் சத்தி; கவரி - சாமரை; அத்தன் - தந்தை; ஐயாறன் - தலைவன்; அம்மான் - பெருமையுடையவன்.

### ஆய்வுரை

சுண்ணம் இடித்து, திருமுழுக்கு விழா (தீர்த்தோற்சவம்) நடைபெறுமுன், 'முத்து நல்தாமம் தொங்கவிடுதல் முதல் தீபம் வைக்கும்வரை, வழிபாடு நடைபெறுகின்றது. "புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டு, பூமாலை புனைந்தேத்தல்" என்று அப்பர் செப்பிய ஒப்புயர்வற்ற சரிகை வழிபாடே, இங்கு இடம்பெறுகின்றது. அடுத்து, புகழ்ந்துபாடி, தலையாரக் கும்பிடுதல் நடைபெறுகின்றது. தொடர்ந்து நிகழும் தீர்த்த விழா, வீடுபேற்றைச் சுட்டுவதால். இதனை அருளும் திருவருட் சத்தியரே சுண்ணம் இடித்தலில் முதலிடம் பெறுகின்றனர். இதனை வலியுறுத்துவதே,

"தன்நிலைமை மன்உயிர்கள் சாரத் தருஞ்சத்தி
பின்னம் இலான் எங்கள் பிரான்" - திருவருட்பயன்

சிவபிரானின் திருவாற்றல்களையும், அவற்றிற்குத் துணையான திருவருட் சத்திகளையுமே, இப்பாட்டுக் குறிக்கின்றது.

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகிர் அன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறநிலாமே
குனிமின் தொழுமின்எம் கோன்எம்கூத்தன்
தேவியும் தானும்வந்து எம்மைஆளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே

### பொழிப்புரை

கொன்றை மலர்மாலையை அணிந்த நீண்ட சடையினையுடைய எமது சிவபிரானுக்குத் திருப்பொற்சுண்ணம் இடிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். மாங்காய்ப் பிஞ்சின் பிளவுபோன்ற, அழகிய கண்களையுடைய பெண்களே! வாருங்கள்; வந்து ஒன்று சேர்ந்து பாடுங்கள். தொண்டர்கள் வெளியே நில்லாமல், உள்ளே கூப்பிடுங்கள். மகிழ்ச்சியால் ஆடுங்கள் வணங்குங்கள். எங்கள் தலைவனும் எமது கூத்தப் பிரானுமாகிய இறைவன், தமது சத்தியுடன் வந்து எம்மை ஆண்டருள, சிவந்த பொன்நிறம் உள்ள சுண்ணத்தை நாம் இடிப்போமாக.

அருஞ் பதவுரை

வார் - நீண்ட; வடு - பிஞ்சு; வகிர் - பிளவு; அன்ன - ஒத்த; கண்ணீர் - கண்களையுடைய பெண்கள்; வம்மின் - வாருங்கள்; குனிமின் - ஆடுங்கள்.

ஆய்வுரை

இப்பாசுரத்தில், சுண்ணம் இடிப்பவரை வருணிக்கும் போது, கண்களைக்கொண்டே ''கண்ணீர்'' என்று வினையாலணையும் பெயராகச் சுட்டப்பெற்றனர். கண்ணில் சிறந்த உறுப்பில்லை. கண், கருணையையே நாடவேண்டும். இதனையே ''கண்ணோட்டம்'' என்பர் சான்றோர். ''கண்ணிற்கு அணிகலன் கண்ணோட்டம்'' என்பது, வள்ளுவன் தெள்ளிய மொழி. ''வம்மின்கள், வந்துடன் பாடுமின்கள்'' என்பது கருணைமிகு அருணகிரியாரின் ''பாடும் பணியே பணியாய் அருள்வாய்'' என்ற வேண்டுதலை ஈண்டு நினைவூட்டும். இறைவனை அடைய, அடியார் நடுவுள் அமரவேண்டும். ''அடியேன் அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்'' என்று இறைவனோடு வாதிட்டவர் வாதவூரர். இதனாலேயே, ''கூவுமின் தொண்டர் புறம் நிலாமே'' என்று இப்பாட்டில் குறிக்கப்பெறுகின்றது. தொண்டர் கூடி, ''பாடுமின், குனிமின், ஆடுமின், தொழுமின்'' என வழிபாடு இங்கு தொடர்கின்றது. சத்தியின்றிச் சிவனால் எதுவும் சாத்தியமில்லை. இக்கருத்துக்களையெல்லாம்' உள்ளடக்கியே, ''எம்கோன் எம்கூத்தன் தேவியும் தானும் வந்து எம்மை ஆள'' என்ற வரிகள் அருளப்பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழில்சுடர் வைத்துக் கொடிஎடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆள்உமை யாள்கொழுநற்கு
ஏய்ந்த பொற்சுண்ணம் இடித்துநாமே. 3

பொழிப்புரை

அழகிய விபூதியை அணிந்து, சுண்ணம் இடிக்கும் மண்டபத்தை மெழுகி, தூய்மையான பொன்போன்ற மஞ்சள் பொடியைத் தூவி, இந்திர உலகத்திலுள்ள கற்பகக் கிளைகளை நட்டு, அழகிய தீபங்களை எங்கும் ஏற்றி, இடபக் கொடியை எடுத்து, இந்திரனதும், பிரமனதும், திருமாலினதும் தலைவனும் வேலவனுக்குத் தந்தையுமாகி, எம் போன்ற கடையரையும் ஆட்கொள்ளும் உமாதேவியின் மணவாளனுக்குத் தகுந்த பொன் போன்ற சுண்ணத்தை நாம் இடிப்போமாக.

அருஞ்பதவுரை

சுந்தரம் - அழகு; எழில் - அழகு; அந்தரர்கோன் - வானுலகத் தலைவனான இந்திரன்; அயன் - பிரமன்; ஆழியான நாதன் - சக்கராயுதத்தையுடைய திருமாலுக்குத் தலைவனான; தாதை - தந்தை; எந்தரம் - எமது தரம்; கொழுநன் - கணவன்; ஏய்ந்த - தகுந்த.

ஆய்வுரை

சுந்தர நீறு அணிதலின் நோக்கம், திருநீற்றின் வெண்மை போன்று, எமது உள்ளங்களைத் தூய்மையாக்கல் இதனையே, ''பூசும் நீறும்போல் உள்ளும் புனிதர்கள்'' என்று குறிப்பிட்டுள்ளார் சேக்கிழார். ''நிதி பரப்பி'' என்பது நவமணிகளைக் குறித்தது அவையாவன, கோமேதகம், நீலம், பவளம், மரகதம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கம், முத்து, புருடராகம், வைடூரியம், வைரம் என்பன. கற்பகம் கேட்பதைத் தருவதால், இங்கு அதன் சின்னமாக, கற்பக தருவின் கிளைகள் நாட்டப்பெறுகின்றன. "கொடி எடுமின்" என்பது இடபக்கொடி சிவனின் அறச்சிந்தையையும் ஞானவடிவையும் எடுத்துக்காட்டும். 'அந்தரர்' தொடக்கம் "ஆழியான நாதன்" வரை, சிவபிரான் விண்ணவருக்கும் மண்ணவருக்கும் தலைவர் என்பதை வலியுறுத்தும். "வேலன் தாதை" என்பதில் "வேலன்" ஆழ்ந்து அகன்ற நுண்ணிதான வேலைக் குறித்து, இதை ஏந்திய வேலனின் தந்தையாகிய சிவபெருமானும், சச்சிதானந்த (சத்து + சித்து + ஆனந்தம்) வடிவினன என்ற சித்தாந்தத் தத்துவத்தை விளக்கும். "எந்தரம் ஆள் உமையாள் கொழுநன்" என்பதில் "எந்தரம் ஆள்" எம்மைப் போன்ற அடியவரை ஆளும் இறைவன்" என்பதை எடுத்துக்காட்டும். "உமையாள் கொழுநன்" என்ற சொற்றொடர், சத்தியின்றிச் சிவமில்லை என்ற இறைவனின் அம்மை அப்பர் தத்துவத்தை விளக்குகின்றது.

காசுஅணி மின்கள் உலக்கை எல்லாம்
காம்புஅணி மின்கள் கறைஉரலை
நேசம் உடைய அடியவர்கள்
நின்று நிலவுகஎன்று வாழ்த்தித்
தேசம்எல் லாம்புகழ்ந்து ஆடும்கச்சித்
திருவேகம் பன்செம்பொன் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்துநாமே 4

பொழிப்புரை

உலக்கைகளுக்கெல்லாம் மணி வடத்தைக் கட்டுங்கள். நிறம் தீட்டப்பெற்ற உரல்களைப் பட்டுச் சீலைகளால் சுற்றுங்கள் பத்தி நிறைந்த அடியவர்கள் நீடு வாழ்கென வாழ்த்தி, உலகமெல்லாம் கொண்டாடும் காஞ்சி நகரிலுள்ள அழகிய செம்பொன்னாலான கோயிலைப் பாடிக்கொண்டு, இதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும்மலங்களையும் இருவினைகளையும் நீக்கிக் கொண்டு, இறைவனைப் புகழ்ந்து பாடி பொன்போன்ற சுண்ணத்தை நாம் இடிப்போமாக.

அருஞ் பதவுரை

காசு - மணிவடம்; காம்பு - பட்டாடை; கறை - நிறம்; கருங்காலி - மரம்; ஆடும் - கொண்டாடும் காஞ்சிநகர்; பாசம் - ஆணவம், கன்மம், மாயையாகிய மும்மலங்கள். வினை - நல்வினை, தீவினை; பறித்து - நீக்கி

ஆய்வுரை

அடியவர்கள் புகழ் நிலைபெற்றாலே உயிர்கள் நிலைபெற்று வாழும் ஆகவே அவர்களை வாழ்த்த வேண்டும் இதனையே அடியவர்கள் "நின்று நிலவுக என்று வாழ்த்தி" என்ற வரிகள் வலியுறுத்துகின்றன. காஞ்சிநகர் கல்வியில் சிறந்து விளங்கியது. "கல்வியைக் கரையிலாத காஞ்சிமாநகர் தன்னுள்ளதால்" என்று அப்பரடிகள் அருளிச்செய்தார் இதனாலேயே, "தேசம் எல்லாம் புகழ்ந்து ஆடும். கச்சித் திருவேகம்பன் கோவில் பாடி" என்று இங்கு குறிப்பிடப்பெற்றது. பயன் கருதிச் செய்யும் நல்வினையும், தீவினையும் பிறவிக்குக் காரணமாய் இருத்தலால், இது முத்திக்குத் தடை ஆகவே, நல்வினையும், தீவினையும் நீங்க வேண்டும். "இருள் சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள்சேர் புகழ் புரிந்தார்மாட்டு" என்று வலியுறுத்தினார் வள்ளுவர். இச் சித்தாந்தக் கோட்பாடே "பாசவினையைப் பறித்துநின்று" என்று இப்பாசுர இறுதியில் உறுதி செய்யப்பெறுகின்றது.

அறுகெடுப் பார்அய னும்அரியும்
அன்றிமற்று இந்திர னொடுஅமரர்
நறுமுறு தேவர் கணங்கள் எல்லாம்
நம்மிற்பின்பு அல்லது எடுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொன் கோயில்பாடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறுவல்செவ் வாயினீர் முக்கண்அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே 5

### பொழிப்புரை

பிரமனும் தேவனும் அல்லாமல், மற்றைய இந்திரனும் தேவர்களும் அறுகம் புல்லினை எடுப்பார்கள். முறுமுறுத்துக் கொண்டு செல்லும் தேவர் கூட்டத்தை எமக்கு முன்பு அறுகை எடுத்துக் கொண்டுபோக விடமாட்டோம் நெருக்கமான மும்மதில்களையுடைய முப்புரங்களை அழித்த, மேரு வில்லையுடைய ஏகம்பரநாதருடைய சிவந்த பொன்னாலான கோயிலைப் பாடி, புன்சிரிப்போடு சிவந்த வாயையுடைய தோழியரே! மூன்று கண்களுடைய எமது தந்தையாகிய இறைவன் குடமுழுக்கு ஆட, பொன்போன்ற சுண்ணத்தை நாம் இடிப்போமாக.

### அருஞ்சொற்பொருள்

அயன் - பிரமன்; அரி - திருமால்; அமரர் - தேவர்; நறுமுறு - முணுமுணு; கணம் - கூட்டம்; செறிவு - நெருக்கம்; வில்லி - வில்லையுடையவர்; முறுவல் - புன்சிரிப்பு

### ஆய்வுரை

சுண்ணத்தோடு சேர்க்கப்பெற்ற அறுகம்புல்லை எடுப்பதற்குப் பிரமனும் திருமாலும் இந்திரனும் தேவர்களும் போட்டி போட்டுக்கொண்டு முன் நிற்பாரதலால், தம்முள் மாறுபட்டு அவர்கள் முறுமுறுத்தலின் "நறுமுறு தேவர் கணங்கள்" எனப்பெற்றது. "மும்மதில்" இரும்பு பொன் வெள்ளி, என்ற உலோகங்களால் ஆக்கப்பெற்றது. இரும்பு ஆணவத்தையும், பொன் கன்மத்தையும், வெள்ளி மாயையும் குறிக்கும். ஆகவே, மும்மதில் என்பது மும்மலங்களையும் "எய்த" என்பது இம்மலங்களை அழித்தலையும் என்ற சித்தாந்தக் கருத்தை எடுத்துக்காட்டும். "முக்கண் அப்பர்" என்பது மூன்று கண்களுடைய தந்தை என்பது விளக்கும். 'முக்கண்' சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய கண்களைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டும் இவற்றுள் ஞானத்தை உணர்த்தும் நெற்றிக் கண்ணாகிய ஞானத்தை எமது தந்தை உடையவன் என்பதை அறிந்து சிந்தை மகிழ்வோம்.

உலக்கை பலஒச்சு வார்பெரியர்
உலகம் எலாம்உரல் போதா தென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காணா உலகங்கள் போதா தென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்துநாமே. 6

பொழிப்புரை

உலகம் எல்லாம் உரலாக இருப்பினும், இடிப்பதற்கு இடம் போதாதென்று, பெரியவர்கள் பல உலக்கைகளைக் கொண்டுவந்து இடுவார்கள். சுண்ணம் இடிப்பதைப் பார்ப்பதற்குப் பல அடியார்கள் கூடுவர். பூவுலகில் நிற்பதற்கு இடம் போதாதென்று, பல அடியவர்கள் திருப்பொற்சுண்ண விழாவில் கலந்து களிக்கக் கூடுவர். அடியவராகிய நாம் நன்மை அடைவதற்காக ஆண்டருளி, அன்று அலர்ந்த மலர் போன்ற பாதங்களைத் தலையில் சூடுமாறு, மலையரசனுக்கு மருமகனும் சிவபெருமானைப் பாடிப் பாடி மகிழ்ந்து, பொன் போன்ற சுண்ணத்தை நாம் இடிப்போமாக.

அருஞ்பதவுரை

ஒச்சுதல் - உயர்த்துதல்; நலக்க - நன்மை அடைய; நாண் மலர் - அன்று பூத்த செந்தாமரை; மருகன் - மருமகன்

ஆய்வுரை

"கலக்க அடியார் வந்து நின்றார், காணா உலகங்கள் போதாது என்றே" என்பது, எல்லா உலகங்களிலும் தேடினாலும் காணமுடியாத பெருமையைக் கொண்ட அடியவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் கலந்து, திருவருள் பெற வந்து நின்றார்கள் என்று பொருள்படும். எங்கு தேடியும், எவ்வாறு உரைத்தும், ஒப்பாரும்மிக்காரும் இல்லாதவர் என்ற அருமையை "தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்று பெரியபுராணம் பாராட்டுகின்றது. சிவனோடு கலந்து பெற்ற பேற்றை "நாண் மலர்ப்பாதங்கள் சூடத் தந்து" என்ற வரி எடுத்துக்காட்டி, திருவடி தீட்சையின் மகிமையை விளக்குகின்றது. மலைக்கு மருகன்" என்பது, இமயமலைக்கு அரசனான இமவான் மகள் பார்வதி அம்மையாரை மணந்த சிவபிரானை குறிக்கின்றது. "பாடிப் பாடி" என்பதால், பாட்டே இறைவனுக்கு அருச்சனை என்று சேக்கிழார் அருளிய கோட்பாடு வருவிக்கப்பெற்றது. இதன் பயனும் முத்தி இன்பத்தில் திளைக்கப் பேரவாக்கொண்ட காரைக்கால் அம்மை "மகிழ்ந்து பாடி, அடியின் கீழ் இருக்க" என்று வேண்டாமையிலானை வேண்டினர்.

சூடகம் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாம்எழுந்து ஆர்ப்பஆர்ப்ப
நாடவர் நம்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
பாடகம் மெல்லடி ஆர்க்கும் - மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்துநாமே. 7

பொழிப்புரை

முன் கைவளையல்களும் தோள்வளையல்களும் ஓயாது ஒலிக்க, தொண்டர் கூட்டம் எழுந்துநின்று ஆரவாரம்செய்ய நாட்டிலுள்ளோர் எம்மை இகழ்ந்து சத்தம்செய்ய, நாமும் அவர்களுக்கு இரங்கி நகைப்போம். பாடகம் அணிந்த மென்மையான திருவடிகளையுடைய உமையம்மையை இடது பக்கத்திலுள்ள எமது மேலான கடவுளும் பொன்போன்ற பெரிய மலைக்குத் தலைவனும் ஆனவர் குடமுழுக்கு ஆட, பொன்னை ஒத்த சுண்ணத்தை நாம் இடிப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அரும்பதவுரை

சூடகம் - மூன் கைவளையல்; ஆர்ப்ப - சத்தம் செய்ய; குழாம் - கூட்டம்; பாடகம் - கால் அணி; பங்கினன் - பாகமாகக் கொண்டவன்; பராபரன் - மேலான கடவுள்; ஆடகம் - பொன்; மா - பெரிய; அன்ன - போன்ற; கோ - தலைவன்

### ஆய்வுரை

''தொண்டர் குழாம் ஆர்ப்ப ஆர்ப்ப'' என்பது தொண்டர் கூட்டம். ''சிவசிவ'' என்று ஆரவாரம் செய்தலைக் குறிக்கும். இதனையே திருமூலர் ''சிவசிவ என்றிடத் தீவினை அகலும்'' என்றனர். பாச வாழ்வில் தத்தளிக்கும் கீழ்மட்டத்தவர், உயர்நிலையில் உள்ளோரைப் 'பித்தன்' என்று பரிகசிப்பது இயல்பே. இவ்வநுபவத்தைப் பெற்ற வாதவூர் அண்ணல் தம்மை இகழ்ந்தோரை ''பித்தர் என்று என்னை உலகவர் பகர்வர்'' என்று அதிசயப்பத்தில் துதிசெய்கின்றனர். இதே கருத்துத்தான், ''நாடவர் நம்தமை ஆர்ப்ப ஆர்ப்ப நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப'' என்ற வரிகளிலும் விரவியுள்ளது. ''பராபரன்'' என்ற சொல், மிக மேலானவன் என்ற கருத்தைத் தவிர, 'பரைக்கு' அதாவது சுத்த மாயைக்கு மேலானவன் என்ற பொருளையும் தரும் ''மா மலை'' என்பதில், இறைவன் பெரிய மலையை ஒத்தவன் என்ற உவமை இடம்பெற்றுள்ளது மலைக்குள்ள சில சிறப்பு இயல்புகளான உயரம், திட்பம், செல்வங்களை வழங்குதல் என்பவற்றை இறைவனுடன் ஒப்பிட்டால், முறையே எமக்கு மேலானவன், பந்தங்களால் பிடிக்கப்பெறாத அசைவற்றவன், முத்தி இன்பத்தைத் தருபவன் என்ற இறைத் தன்மைகளை அறியலாம்.

வாள்தடம் கண்மட மங்கைநல்லீர்
　　வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோள்திரு முண்டம் துதைந்து இலங்கச்
　　சோத்தெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள்கொண்ட நாண்மலர்ப் பாதம்காட்டி
நாயில் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்துநாமே. 8

### பொழிப்புரை

ஒளி பொருந்திய அகன்ற கண்களையுடைய இளம் பெண்களான நல்லவர்களே! வரி வளையல்கள் சத்தம் செய்யவும், பருத்த மார்பு பொங்கவும். தோளில் மூன்று குறிகளாக அணிந்த திருநீறு ஒன்று சேர்ந்து விளங்கவும் நெற்றியில் இடப்பெற்ற திருநீறு படிந்து ஒளிவிடவும், எமது தலைவனுக்கு 'வணக்கம்' என்று பல தடவைகள் சொல்லி, அன்று பூத்த செந்தாமரையும் வெட்கப்படக்கூடிய உயர்ந்த திருவடிகளைக் காட்டி. நாயினும் கீழ்ப்பட்ட எம்மை இப்பிறவியில் ஆட்கொண்ட சிறப்பை இடைவிடாது பாடி, இறைவன் குடமுழுக்கு ஆடுதற்கு, பொன்போன்ற சுண்ணத்தை நாம் இடிப்போமாக.

### அருஞ்பதவுரை

வாள் - ஒளி பொருந்திய, கூர்மையான; தடம் - அகலமான; மடம் - இளமையான; வண் - பருத்த; முண்டம் - நெற்றி; துதைந்து - பதித்து; இலங்க - விளங்க; சோத்து - உச்சிமேல் கைவைத்து வணங்கி; நாட்கொண்ட - அன்று மலர்ந்த; நாண் - நாணம்; இம்மை - இப்பிறவி; வண்ணங்கள் - சிறப்புகள்.

### ஆய்வுரை

தோளிலும் நெற்றியிலும் மூன்று அடையாளமாக (திரிபுண்டரம்) அணிந்த திருநீறு. இங்கு வருணிக்கப்பெற்றது இத்திருக்காட்சியை அப்பர் மேலேற்றி, "தூய வெண்ணீறும் துதைந்த பொன்மேனியும்" என்று பெரியபுராணம் படம் பிடித்துக் காட்டுகின்றது. "சோத்து" என்ற சொல், உயர்ந்தோரைத் தாழ்ந்தோர் உச்சிமீது கைகுவித்து வணங்குவதைச் சுட்டும் "நாட்கொண்ட நாண் மலர்ப் பாதம் காட்டி" என்பது, அன்று மலர்ந்த செந்தாமரைப்பூ. இறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனின் பாதத்தை அருச்சிக்கக் கூசுகின்றது என்று உயர்வு நவிற்சி அணியாகப் பொருள்தந்து, இறைவனின் பாதங்கள் அன்றலர்ந்த மலர் மட்டுமன்றி, இயல்பிலும் அதை வென்றது என்ற கருத்தையும் தருவது, நவில் தொறும் இன்பம் ஈனுமன்றோ! இறைவனோடு ஒப்பிடப்பெற்ற ஆன்மா, இழிவு நிலையிலுள்ளது என்ற சித்தாந்தக் கருத்தை விளக்கவே இங்கு, "நாயிற் கடைப்பட்ட நம்மை" என்று பாடினர். இந்நிலையை, "நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத் தாயிற் சிறந்த தயாவான தத்துவனே" என்ற சிவபுராணக் கூற்று அரண்செய்யும்.

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்எனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 9

பொழிப்புரை

உலகம் முழுவதும் உரலாகக் கொண்டு, மகாமேரு மலையை உலக்கையாக நாட்டி, உடம்பாகிய மஞ்சளை நிறைய இட்டு, மேலான திருப்பெருந்துறைச் சிவனின் சிவந்த திருவடிகளைப் பாடிப் பாடித் துதித்து, செம்பொன் உலக்கையை வலக்கையில் பிடித்து, எம் தலைவன் அழகிய திருச்சிற்றம்பலத்தில் வாழ்கின்றவனே குடமுழுக்கு ஆட, பொன் போன்ற சுண்ணத்தை நாம் இடிப்போமாக.

அருஞ்பதவுரை

மெய் - உடம்பு; அட்டி - இட்டு; மேதகு - உயர்ந்த; தென்னன் - தென்னாடுடையோன்; செய்ய - சிவந்த; ஐயன் - தலைவன்; அணி - அழகிய; வாழ்நன் - வாழ் + நன் வாழ்பவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆய்வுரை

இறைவனை வணங்க எல்லோரும் திருப்பொற்சுண்ணம் இடிப்பராகையால், "வையகம் எல்லாம் உரலதாக" என அருளினார். உலகநடுவில் பொன்மலை இருப்பது போன்றே, உலகமாகிய உரலின் நடுவே, மகாமேருவாகிய உலக்கை நாட்டப்பெறுகின்றது. இதனை, "வையகம் எல்லாம் உரலதாக மாமேரு எனும் உலக்கை நாட்டி" என்று உருவகம் செய்தார். உடம்பாகிய மஞ்சளை உரலில் இட்டு இடிப்பதால், அது துன்பத்தில் அமிழ்ந்தி, இறைவனைப் பாடித் துதித்து, அவனடி அடையும் என்ற சித்தாந்தக் கருத்து உய்த்துணர்ந்து உவத்தற்குரியது. இதனையே, நினைந்துருகும் அடியாரை நையவைத்தாய், நின்னாலே தீவினைகள் நீங்க வைத்தாய்" என்று துன்பத்தில் இன்பம் கண்டவர் அப்பர் பெருமான். குடமுழுக்கு விழா (தீர்த்த உற்சவம்) இறைவனின் ஐந்தொழிலில் ஒன்றாகிய அருளலைக் குறிக்கும். இவ்வுண்மையைத் தெரிவிக்கவே, "மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி மேதகு தென்னன் பெருந்துறையான் செய்ய திருவடி பாடிப் பாடி" என்ற வரிகள் எழுந்தன.

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆட
சிந்தம் சிவனொடும் ஆடஆடச்
செங்கயல் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆட
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொடு ஆடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 10

### பொழிப்புரை

முத்து மாலைகள் அணியப்பெற்ற தனங்கள் குலுங்கி ஆடவும், அடர்த்தியான கூந்தலிலுள்ள மாலையைச் சுற்றிய வண்டுக் கூட்டங்கள் அங்குமிங்கும் சுழலவும், நெஞ்சம் சிவபிரானை நினைந்து மகிழவும், சிவந்த கயல்மீனின் கண்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகவும், பத்திப் பித்தனான சிவனோடு ஆடவும், பிறவித்துன்பங்கள் நீங்கியவரோடு கலக்கவும், தந்தையாகிய சிவபிரானின் கருணையொடு திளைக்கவும், இறைவன் குடமுழுக்கு ஆட, பொன் போன்ற சுண்ணத்தை நாம் இடிப்போமாக.

அருஞ்பதவுரை

மொய் - அடர்த்தி; குழல் - கூந்தல்; சித்தம் - மனம்; பணித்தல் - உகுத்தல்; அத்தன் - தந்தை.

ஆய்வுரை

இப்பாட்டில் வரும் ''ஆட ஆட'' என்ற சொற்றொடர், முதல் வரிசையில் மட்டும் ஆடுதல் என்ற பொருளில் வந்ததாகக் கொள்ளலாம். ஏனைய ஆறு வரிகளிலெல்லாம், இது பல பொருள் ஒரு மொழியாய் (Horonyms) முறையே சுழல, உருக, பெருக, ஒன்ற, கலக்க, திளைக்க என்ற பொருளைப் பொருத்தமாகக் கொண்டுவரும். ''சித்தம் சிவனொடு ஆட ஆட'' என்பது மணிவாசகர் சிவபெருமானை அன்றி வேறு எந்தத் தெய்வத்தையும் சிந்திக்கவும் மாட்டார் என்பதை எடுத்துக்காட்டுகின்றது. இந்த அசைக்க முடியாத நம்பிக்கையை ''உள்ளேன் பிற தெய்வம் உன்னையல்லாது எங்கள் உத்தமனே'' என்று திருச்சதகத்தில் அடிகளார் திடப்படுத்தினர்.

மாடு நகைவாள் நிலா எறிப்ப
வாய்திறந்து அம்பவ ளம்துடிப்ப
பாடுமின் நம்மை ஆண்டவா றும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தம் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத்து ஆடினானுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்துநாமே. 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொழிப்புரை

ஒளிபொருந்திய பற்கள் நிலாப்போன்று பக்கங்களில் பிரகாசிக்க, வாயைத் திறந்து, அழகிய பவளம் போன்ற உதடுகள் அசையப் பாடுங்கள். எம்மைச் சிவபெருமான் ஆட்கொண்ட வகையினையும் தொண்டராகிய தன்மையையும் பாடிப்பாடி அவனைத் தேடுங்கள். எம் தலைவனைத் தேடுவதால், உள்ளம் மகிழ்ச்சிகொண்டு திளைத்து, மீண்டும் தெளிந்து கூத்தாடுங்கள். தில்லையம்பலத்தில் திருக்கூத்தாடும் அம்பலவாணன் குடமுழுக்காட, பொற்சுண்ணத்தை நாம் இடிப்போமாக.

## அருஞ்பதவுரை

மாடு - பக்கம்; நகை - பல்; வாள் - ஒளி; அம் - அழகிய; வண்ணம் - தன்மை; சித்தம் - உள்ளம்.

## ஆய்வுரை

"அம்பவளம் துடிப்ப" என்பது, அழகிய பவளம்போன்ற சிவந்த உதடுகள் என்று உருவக அணியாகக் பொருள்படும். "எம்பெருமானைக் தேடித் திகைத்து சித்தம் களிப்புத் தேறி ஆடுமின் என்ற வரியிலுள்ள சொல்ஒழுங்கை மாற்றி, "எம்பெருமானைத் தேடி, திகைத்து, சித்தம் களிகூரத்தேறி ஆடுமின்" என்று உரைநடையாகமாற்றிப் பொருள்கொள்க. இறைவனைத் தேடிதேடிக் காணுமல் திகைத்தவர், ஈற்றில் கண்டுகொண்டார் இதனால், சித்தம் களிகூரத் தேறினர். எனபெற்றது எங்கே இறைவனைக் கண்டார் என்ற புதிரை, "தேடித்தேடொணுத் தேவனை என்னுளே தேடிக்கண்டு கொண்டேன்" என்று அப்பர் அநுபவச் சான்றுக வெளிப்படுத்தினர், இங்ஙனம், இறைவன் இதயத்தில் இருப்பதை உணர்ந்தவுடன் ஆடுமின்" என்ற செயல் நிகழ்கின்றது மூன்றும் வரியிலுள்ள "ஆளுதல்" நான்காவதிலுள்ள "பணிகொள்ளல்" ஆருவதிலுள்ள "களித்தல், தேறுதல்" ஆகிய நான்கு செயல்களும், முறையே சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்ற நான்கு சைவநெறிகளை அறிவுறுத்தும் என்று அறிஞர் கருதுவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைஅமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
அகப்படுத்து ஆட்கொண்டு அருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையரவு அல்குல் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 12

பொழிப்புரை

கருமை நிறக் கழுத்தையுடையவனை தேவர்கட்கு அமுதினை மாணிக்கமான திருக்கூத்தனை தேவர் தலைவனை, தலைவர்க்கு தலைவனை, அகப்படச் செய்து தாமே ஆட்கொள்ளும் அருளாளனை, பொய்யர்க்குப் பொய்யனை மெய்யர்க்கு மெய்யனை பூப்போன்ற சிவந்த வரிபடர்ந்த இரு கண்களையும், பொன்னாலானதோள் வளையல்களையும் பாம்புப் படம் போன்ற அல்குலையும் உடைய இளம் நங்கையரே! நாம் பாடிப் பொன்போன்ற சுண்ணத்தை இடிப்போமாக.

அருஞ்பதவுரை

அமர் - பொருந்திய; கண்டன் - கழுத்தை உடையவன் வானநாடர் - தேவர்; மருந்து - அமுதம்; ஐயன் - தலைவன் போது - மலர்; அரிகண் - வரி படர்ந்த கண்; தொடி - வளையல் பையரவு - பாம்பின் படத்தினை ஒத்த.

ஆய்வுரை

''மைஅமர் கண்டன்'' என்பது அருட் பெருங்கருணைத் திருநீலகண்டத் தியாகராசனைக் குறித்தது. ''அமரர்கட்கு அருள்புரிவது கருதி, நீலமார் கடல் நஞ்சினை உண்டு கண்டத்தே வைத்த பித்த'' என்பது சுந்தரர் செந்தமிழ். இறைவன் தாயினுஞ் சிறந்தவன். உயிர்களைத் தேடி ஆட்கொள்பவன். இறைவனின் இவ்வியல்புகளை, ''தாயிற் சிறந்த தயாவான தத்துவனே'' என்று சிவபுராணத்திலும், பால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பரிந்து" என்று பிடித்த பத்திலும் வருவது காண்க. இதனையே இங்கு "அகப்படுத்து ஆட்கொண்டு அருமைகாட்டும்" என்று வியக்கின்றார் வாதவூரர். அன்பில்லாதவருக்கு இறைவன் வெளிப்படான். அன்புடையோருக்குக் காட்சி அளிப்பான் என்ற உண்மை "பொய்யர்தம் பொய்யினை, மெய்யர் மெய்மை" என்று இங்கு விளக்கப் பெறுகின்றது.

மின் இடைச் செந்துவர் வாய்க்கரும்கண்
வெண்நகைப் பண்அமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெருமான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 13

பொழிப்புரை

மின் போன்ற இடையையும், பவளம் போன்ற சிவந்த உதடுகளையும், கருமையான கண்களையும், வெண்மையான பற்களையும், இனிமையும் மென்மையுமான பேச்சையும் உடையீர்! என்னுடைய நிறைந்த அமுது, எங்கள் தந்தை எமது தலைவன், இமயமலை அரசன் இமவான் மகளுக்குக் கணவனாகவும், மகனாகவும் தகப்பனாகவும் விளங்குபவனும் எமது தலைவனின் திருவடிகளைப் பாடி, பொன் ஆபரணங்கள் அணிந்த மார்பினையுடைய நல்ல மங்கையரே! பொன் போன்ற திருச்சுண்ணத்தை நாம் இடிப்போமாக.

அருஞ்சொற்பதவுரை

செந்துவர் - சிவந்த பவளம்; நகை - பல்; பண் - இனிமை; ஆர் - நிறைந்த; கேள்வன் - கணவன்; ஐயன் - தலைவன்; பூண் - ஆபரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆய்வுரை

இப்பாட்டு, சிவ முகூர்த்தங்களை விளக்குகின்றது. ஒரே இறைவன் அம்மையாகவும், அப்பனாகவும், கணவனாகவும், தந்தையாகவும், தமையனாகவும் மாட்சி மிக்க காட்சி அளித்து ஆட்சி செய்கின்றான். ஆற்றல் மிக்குச் செயல்படும்போது அம்மையாகவும், அறிவைக்கொண்டு செயல்படும் போது அப்பனாகவும், பார்வதி அம்மையை மணந்தபடியால் கணவனாகவும், சிவத்தினின்று சத்தி தோன்றியதால் தந்தையாகவும், சுத்த மாயையிலிருந்து இறைவனின் கிரியா ஞான சத்திகள் தோன்றி முறையே சிவ தத்துவமும் சத்தி தத்துவமும் முன்பின்னாக உண்டாதலால் சத்திக்குச் சிவம் தமையன் என்றும் விளக்குவர் சித்தாந்த வித்தகர்.

சங்கம் அரற்றச் சிலம்ப ஒலிப்பத்
தாழ்குழல் சூழ்தரும் மாலையாடச்
செங்கண் வாய்இத ழும்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அரா இரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலின் கொங்கை பொங்கப்
பொற்திருச் சுண்ணம் இடித்தும்நாமே 14

## பொழிப்புரை

சங்காலான வளையல்கள் சத்தம் செய்யவும், கால் சிலம்பு ஒலிக்கவும், நீண்ட கூந்தலிலே வட்டமாகக் கட்டப் பெற்ற மாலை ஆடவும், கொவ்வைக் கனி போன்ற சிவந்த உதடுகள் அசையவும், செம்மையான ஆபரணங்களை அணிந்திருக்கும் பெண்களே! சிவலோகச் சிறப்புப்பாடி, கங்கை ஒலித்தலினால் பாம்புகள் இரைச்சலிடவும், கட்டப்பெற்ற சடைமுடியையுடைய சிவபிரான் திருவடிகளுக்கே மிகுந்த அன்பினால் தனங்கள் பொங்கவும் பொன்போன்ற திருச்சுண்ணத்தை நாம் இடிப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அருஞ்பதவுரை

சங்கம் - சங்கு; அரற்ற - ஒலிக்க; தாழ்குழல் - நீண்ட கூந்தல்; செங்கனி - கொவ்வைப் பழம்; இதழ் - உதடு; சேயிழையீர் - செம்மையான ஆபரணங்களை அணிந்த பெண்களே! அரா - பாம்பு; கற்றை - முடி; கழல் - திருவடி.

### ஆய்வுரை

கங்கையாகிய சக்தி இரைத்தலினால் திருவருளைப் பொலிய, அராவாகிய மாமாயை தன் காரியமாகிய மெய்கள் மூலம் மருட்டும் என்பர் அறிஞர். இக்காட்சிகளைத் தொகுத்து, "கங்கை இரைப்ப, அரா இசைகரும் கற்றைச் சடைமுடியான்" என்று இப்பாட்டின் ஐந்தாம் ஆறும் வரிகள் படம் பிடித்துக் காட்டுகின்றன.

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
  நாடற்கு அரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
  சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்புஅறுத்து ஆண்டுகொண்ட
  கூத்தனை நாத்தழும்பு ஏறவாழ்த்திப்
பானல் தடம்கண் மடத்தை நல்லீர்
  பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே

### பொழிப்புரை

ஞான வடிவாம் கரும்புபோன்ற தெளிவானவனை, வெல்லப்பாகை ஒத்தவனை, அடைய அரிதாகிய நலம் தருவானை, என்றும் கெடாத தேன்போன்றவனை முப்பழச்சுவை ஒத்தவனை, உள்ளத்துள் ஊடுருவி இனிக்கவல்ல தலைவனை பிறவி அறுத்து ஆட்கொண்ட கூத்தபிரானை, நாவில் தழும்பேறப் புகழ்ந்து கருங்குவளைக் கருமையும் விசாலமுமான கண்களையுடைய இளம்பெண் நல்லவரே! பாடி, பொன் போன்ற சுண்ணத்தை நாம் இடிப்போமாக

### அரும்பதவுரை

பாகு - சர்க்கரைப் பாகு; நந்தா - கெடாத; கோன் - தலைவன்; பாணல் - குவளைமலர்; தடம் - அகலமான;

### ஆய்வுரை

கரும்பு, பாகு, தேன், பழம் எல்லாமே இனிப்பானவை இவை, எல்லாவற்றையும் ஒரே இடத்திலே ஒருமித்து எடுத்தாளப் பெற்றதால், ஒருவனாகிய இறைவன் அளவு கடந்த இனிமையானவன் என்று உவமிக்கப் பெற்றது. இதே கருத்து "கரும்பின் தெளிவு, பாகு, நாடற்கரிய நலம், நந்தா த தேன்" என்று இப்பாசுரத்தில் குறிக்கப்பெற்றது. இவை முறையே, சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு சைவ பாதங்களைச் சுட்டும். "பழச்சுவை ஆயினான" என்பது முப்பழங்களான மா, பலா, வாழைப்பழங்களை ஒத்தவன் இறைவன் என்பது தெளிவு இம்மூன்றும் முறையே, அறம், பொருள், இன்பம் என்ற உறுதிப் பொருள்களைச் சுட்டும் இச்சுவை போன்றவனை இறைவன் என்பதை "அது பழச்சுவையென அமுதென அமரரும் அறியார்" எனத் திருப்பள்ளியெழுச்சி இறைவனை அறிமுகம் செய்கின்றது.

ஆவகை நாமும்வந்து அன்பர்தம்மொடு
　　ஆள்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனவிலும் கண்டறியாச்
　　செம்மலர்ப் பாதங்கள் காட்டும் செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
　　சிவபெருமானபுரம் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
　　செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே 16

### பொழிப்புரை

உய்யும் வகையை உணர்ந்து, நாமும் அடியார்களோடு சேர்ந்து ஆட்கொள்ளும் வகைகளைப் பாடி, தேவர்கள் கனவிலும் காணமுடியாத செந்தாமரை போன்ற திருவடிகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோருக்கும் காட்டுவான். அவன், செல்வச் சிறப்பு வாய்ந்த நந்திக்கொடியை ஏந்திய வெற்றிக்கொடியோனாகிய சிவபெருமான்; முப்புரத்தை எரித்த வெற்றி வீரன். அவனுடைய திருநாமங்களைப் பாடிபாடி, சிவந்த பொன் போன்ற சுண்ணத்தை நாம் இடிப்போமாக.

### ஆய்வுரை

"தேவர் கனாவிலும் கண்டறியாச் செம்மலர்ப் பாதங்கள்" என்ற வரிகள், தேவர்கள் கனவிலும்கூடக் கண்டு அறியமுடியாத பெருமை வாய்ந்த பாதங்கள் என்று பொருள் படும் "சேவகன் ஏந்திய வெல்கொடியோன்" என்பது. தூய்மையையும் நீதியையும் எடுத்துக்காட்டி, நந்திக் கொடியை ஏந்திய சிவபெருமானைச் சுட்டியது. எமது ஆணவத்தை அடக்க வல்லவன் சிவபிரான் என்றமையை, சேவகன் - வீரன் என்ற சொல் விளக்கியது. சிவபெருமான் தாமாகவே சென்று உயிர்களை ஆட்கொள்ளும் கருணாமூர்த்தி என்ற அருட்திறனையும்" சேவகன் என்ற சொல், "சேவை செய்பவன்" என்ற கருத்தையும் இது தரும். இதனால் "சேவகன்" என்பதை, "சேவை செய்பவன்" என்றும் பொருள் கொள்ளலாம். "இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச் செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை" என்ற திருவெம்பாவைப் பதினொராம் பாட்டு வரிகளை இதற்கு ஆதாரமாகவே, திட்டினர் திருவாதவூரர்.

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கைஏந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனகம் ஆகநஞ்சு உண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொழிப்புரை

தேனை உள்ளடக்கிய பெரிய கொன்றை மாலையைப் பாடி, திருச்சடைமேல் தரித்த வானிலுள்ள சிறந்த இளம் பிறையைப் பாடி, வலக்கையில் ஏந்தி, தசையுள் செலுத்தப் பெறும். பெரிய மழுவையும் சூலப்படையையும் பாடி, விண்ணோரும் மண்ணோரும் அன்று உயர்வுற, உணவென நஞ்சை மிடற்றில் கொண்ட திருவிளையாடலைப் பாடி, பொன் போன்ற சுண்ணத்தை நாம் இடிப்போமாக.

### அருஞ்பதவுரை

அகம் - உள்ளே; மா - பெரிய; வான் - ஆகாயம்; மதிப் பிள்ளை - இளம்பிறை; மால் - திருமால்; விடை - எருது; உம்பர் - விண்ணோர்; இம்பர் - மண்ணோர்; போனகம்-உணவு

### ஆய்வுரை

''திருச்சடைமேல் வானக மாமதிப்பிள்ளை'' என்ற வரியிலுள்ள நுட்பமான கருத்து, விஞ்ஞான ஆய்வுடன் பொருந்தும். ''வானகம்'' என்பது, அறிவுப் பரப்பைக் குறிக்கும். ''மாமதிப் பிள்ளை'' என்ற வளர்பிறை, வளரும் அறிவைச் சுட்டும். அறிவின் முதிர்ச்சி ஒருவரை 'Lunatic' பைத்தியம், பித்தன் ஆக்கும். 'Lunatic' என்ற சொல் 'Lunar' என்ற பதத்திலிருந்து பிறந்து, சந்திரனைக் குறிக்கும். எனவே, பிறைச் சந்திரன் வளர்ந்து, முதிரும் அறிவின் சின்னம். இதை இறைவன் சூடுவதால், அவனை வழிபடும் அடியவர் அறிவினராவர். இதனாலேயே, சுந்தரர் பாடிய முதல் தேவாரத்தின் தொடக்கத்தை ''பித்தா பிறை சூடிப் பெருமானே'' எனப்பாட இறைவன் அடியெடுத்துக் கொடுத்தார். ''மால் விடை'' என்பது, முப்புரம் எரித்த வேளையில், திருமால் இடபமாய்ச் சிவனைத் தாங்கினன் என்பது புராண வரலாறு இதனை ''தட மதில்கள் அவை மூன்றும் தழல் எரித்த அந்நாளில், இடபமாய்த் தாங்கினன் திருமால்காண் சாழலோ'' எனத் திருச்சாழல் குறிக்கின்றது. ''ஊனக மாமழுச் சூலம்'' என்பது, இறைவன அல்லவரை அழித்து, நல்லவரைக் காப்பவன் என்பதை, வலியுறுத்தும். மூன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைகளையுடைய சூலம், படைத்தல், காத்தல், அருளல்'' என்ற இறைவனின் முத்தொழில்களையும் விளக்குவதாகக் கொள்ளலாம்.

அயன் தலை செண்டுகொண்டு ஆடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயத்தனைக் கொன்றுஉரி போர்த்தல்பாடி
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயத்தனைப் பாடிநின்று ஆடிஆடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே 18

பொழிப்புரை

பிரமனுடைய தலையைக் கிள்ளிப் பந்தாடிய திருவிளையாடலைப் பாடி சூரியனின் பல்லைப் பிடுங்கியதைப்பாடி, யானையான கயமுகனைக் கொன்று தோலை அணிந்தமை பாடி, இயமனைக் காலால் உதைத்தமை பாடி, ஒன்றுசேர்ந்த முப்புரம் எரித்தமை பாடி, ஏழை அடிமைகளாகிய எம்மை ஆட்கொண்ட நன்மைகளைப் பாடி, ஆடி ஆடி, தலைவராகிய சிவபெருமானுக்கு சுண்ணத்தை நாம் இடிப்போமாக.

அரும்பதவுரை

அயன் - பிரமன்; செண்டு - பூம்பந்து; அருக்கன் - சூரியன் எயிறு - பல்; கயம் - யானை; காலன் - இயமன்; இயைந்தன - ஒன்றுசேர்ந்த; எய்தல் - அடைதல்; நயம் - நன்மை; நாதர் - தலைவர்.

ஆய்வுரை

''அயன்தலை செண்டு கொண்டு'' என்பது பிரமதேவனின் ஐந்து தலைகளுள், சிவபெருமானைப் பழித்த நடுத் தலையை, சிவனின் முகூர்த்தமான வைரவக் கடவுள் கிள்ளிய செயலைச் சுட்டும். ''அருக்கன் எயிறு பறித்தல்'' என்பது அகந்தை கொண்ட சூரியனுடைய பற்களை, சிவபெருமானின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகூர்த்தமாகிய வீரபத்திரக் கடவுள், உதிரச் செய்தது. "கயந்தனைக் கொன்று உரிபோர்த்தல்" என்பது எல்லா உலகங்களிலுமுள்ளோரைத் துன்புறுத்திய கயமுகா சூரனை மாதங்க மூர்த்தியாய்ச் சென்று தோலைப் போர்த்தலை விளக்கும். "காலனைக் காலால் உதைத்தல்" சிவபெருமானிடம் அபயம் புகுந்த மார்க்கண்டேயரைக் காப்பதற்காக இயமனை உதைத்தலாகும். முப்புரம் எரித்தமை முன்னர் விளக்கப்பெற்றது. இவற்றால் தீயவர் தண்டிக்கப் பெறுவார். என்பதும், இறைவனிடம் அடைக்கலம் புகுந்தோருக்கு அவன் அபயம் அளிப்பான் என்பதும் விளக்கப்பெற்றன. இத்தகைய கருணாமூர்த்தி எம்மையும் பொருட்டாக மதித்த அருள்திறனை வியந்தே, "ஏழை அடியோமை ஆண்டு கொண்ட நயந்தனைப் பாடி, நின்று ஆடி, ஆடி" என்று வாதவூரர் இப்பாசுரத்தில் ஓதினர்.

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்பலத்து எங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைமேல்
இட்டுநின்று ஆடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே. 19

பொழிப்புரை

வட்டமான கொன்றை மாலையைப் பாடி, ஊமத்த மலரையும் பாடி, சந்திரனையும் பாடி, தில்லைச்சிற்றம்பலம் பாடி, சிற்றம்பலத்துக் கூத்தனை செல்வத்தைப் பாடி, கட்டப்பெற்ற பாம்பாகிய கச்சையும்பாடி,பாம்புக் காப்பைப் பாடி,நடராசப் பெருமான் கை வளைத்து ஆடுவதால், தானும் படம் பிடித்து ஆடும் பாம்பைப் பாடி, ஈசனுக்குச் சுண்ணத்தை நாம் இடிப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அரும்பதவுரை

மத்தம் - ஊமத்த மலர்; மதி - சந்திரன்; சிட்டர்கள் - நல்லோர்; மாகணம் - பெரிய பாம்பு; கங்கணம் - பாம்பாகிய காப்பு; கவித்த கை - வளைத்த கை.

### ஆய்வுரை

இப்பாசுரத்தின் தொடக்கத்தில் வட்டமலர்க் கொன்றை மாலை பாடி மத்தமும் பாடி மதியமும் பாடி" என்கிறார் திருவாதவூரர். எல்லோரும் கொள்ளும் கொன்றையும் தள்ளும் ஊமத்தமும் இறைவனுக்கு உகந்தனவே. இதனால், இறைவன் விருப்பு வெறுப்பு அற்றவன் என்பது தெற்றென விளங்கும். இதனையே, "குற்றம் நீ குணங்கள் நீ கூடலாலவாயிலாய்" என்று இறைவனை இறைஞ்சினன் நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன். இங்ஙனம், குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாட பகுத்தறிவு வேண்டுமன்றோ! இதனாலேயே தொடர்ந்து "மதியும் பாடி." என்றார். மதி அறிவின் சின்னம் என்பது முன்னம் விளக்கப்பெற்றது. தில்லைக்கூத்தன் ஆடும்போது படம் விரித்து ஆடும் பாம்புகளும் இடம்பெறுகின்றன. பாம்புக்குப் படையும் நடுங்குமன்றோ! ஐந்தொழில் வல்லான், நந்தமை ஆட்கொள்ள நச்சுப் பாம்பையும் இச்சையுடன் ஏற்றனன். இவற்றை அடக்கி, ஆட்டத்திற்கே ஆட்டம்போட ஆட்டுவிக்கின்றான். கூத்தபிரான் தீயவனை தூயவனாக்கி அருளும் கருணையையே "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே அடக்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே" என, நாவுக்கரசர் பாவில் வடித்தனர்.

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
 மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்கு
சோதியு மாய்இருள் ஆயினார்க்குத்
 துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்கு
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்
 பந்தமு மாய்வீடும் ஆயினார்க்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியும் அந்தமும் ஆயினர்க்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்துநாமே. 20

பொழிப்புரை

வேதமும் வேள்வியும் ஆனவர்க்கு, மெய்ம்மையும் பொய்ம்மையும் உள்ளவருக்கு, ஒளியும் இருளுமாய்த் தோற்றுபவருக்கு, துன்பமும் இன்பமும் ஒன்றானவருக்கு, பாதியும் முழுமையுமாய்க் காட்சி தருபவனுக்கு, பந்தமும் வீடுபேறும் பொருந்தியவனுக்கு, தொடக்கமும் முடிவும் ஆனவருக்கு. குடமுழுக்கு ஆட, பொன்போன்ற சுண்ணத்தை நாம் இடிப்போமாக.

அருஞ்சொற்பதவுரை

சோதி - ஒளி; பந்தம் - கட்டு; வீடு - முத்தி.

ஆய்வுரை

இறைவன் மெய்யருக்குத் தோற்றியும், பொய்யருக்கு மறைந்தும், அன்பருக்கு ஒளியாகவும் வன்பருக்கு இருளாயும், தீவினைப் பயனுல் துன்பமாகவும் நல்வினைப் பயனுல் இன்பமாகவும் காட்சி அளிப்பவன் என்பதை விளக்குவனவே முதல் நான்கு வரிகளும் "சோதியுமாய் இருள் ஆயினர்க்கு'' என்ற மூன்றும் வரியை, சோதியு + மாய் + இருள் + ஆயினர்க்கு' எனப் பிரித்தால், ஒளியும் மாயா இருளும் ஆனவர்க்கு என்ற கருத்துப் புலப்படும். மாயா இருள் ஆணவத்தைக் குறித்தது. ஆணவத்தை இருளோடு ஒப்பிட்டு, "ஒருபொருளும் காட்டாது இருள் உருவம் காட்டும் இருபொருளுங் காட்டாது இது'' என்று திருவருட்பயன் விளக்குகின்றது "பாதியுமாய் முற்றும் ஆயினர்க்கு'' என்பது இறைவனின் ஆண் பெண் (அர்த்த நாரிஸ்வர)வடிவத்தைப் படம் பிடிக்கின்றது.

அச்சுப்பதிப்பு:-
பாலா அச்சகம், காரைநகர். போன்- 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org